மதிப்பிடப்பெற்றது

# நூலறிமுகம்: ஆசிரியப் பணியே அறப்பணி

(Introduction to book of Asiriyap Paniyee ArappaNi)

த. சத்தியராஜ் | T.Sathiyaraj[5]

**கட்டுரைச் சுருக்கம் (Abstract)**

‘‘Parents! Do not hand over your children to educated teachers. Leave it to the teachers who study,” said Khalil Gibran (Asiriyap Paniyee ArappaNi, p. 15). It is the opinion of the majority of educators that teachers in particular should be hard workers regardless of time. Teachers need to be accustomed to reading regularly. It is noteworthy here that the adage "Become a scholar of what you see" is said. But today's teachers are the opposite (minority teachers are the only exception). The book "Teaching is Charity" suggests that these teachers need to realize that it is a charity to improve themselves.

*‘‘பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளைப் படித்த ஆசிரியர்களிடம் ஒப்படைக்காதீர்கள். படிக்கின்ற ஆசிரியர்களிடம் ஒப்படையுங்கள்’’* என்று கலில் கிப்ரான் (ஆசிரியப் பணியே அறப்பணி, ப.15) கல்வி குறித்த கருத்தை முன்வைத்தார். குறிப்பாக ஆசிரியர்கள் காலம் பார்க்காமல் உழைக்கும் உழைப்பாளிகளாக இருத்தல் வேண்டும் என்பது பெரும்பான்மையான கல்வியாளர்களுடைய கருத்தாக அமைகிறது. அவ்வகையில் ஆசிரியர்கள் தொடர்ந்து வாசிக்கும் பழக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். ‘‘கண்டதைக் கற்கப் பண்டிதன் ஆவான்’’ எனும் முதுமொழி ஒன்று கூறப்பெறுவது இங்குக் கவனிக்கத்தக்கது. ஆனால் அதற்கு நேர்மாறாகவே இன்றைய ஆசிரியர்கள் இருக்கின்றனர் (சிறுபான்மை ஆசிரியர்கள் மட்டுமே விதிவிலக்காக இருக்கின்றனர்). இத்தகு ஆசிரியர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ள அது ஓர் அறப்பணி என்பதை உணரவேண்டும் என்பதையே *‘‘ஆசிரியப் பணியே அறப்பணி’’* எனும் நூல் முன்வைக்கின்றது.

**குறிச்சொற்கள்:-** நூலறிமுகம், ஆசிரியர், பணி, அறப்பணி, *Introduction to book , Asiriyap Paniyee ArappaNi*

***Citation:*** *சத்தியராஜ் த.,* ***(May 2021), “****நூலறிமுகம்: ஆசிரியப் பணியே அறப்பணி* ***(Introduction to book of Asiriyap Paniyee ArappaNi)”, IIETS (Inam: International E-Journal of Tamil Studies, (ISSN:2455-0531), Vol.7, Issue 26, pp.32-33.***

**நூலமைப்பு**

இந்நூல் முப்பத்தாறு உட்தலைப்புகளைக் கொண்டமைந்துள்ளது. இந்நூலின் பெயர், இந்நூலுள் அமைந்திருக்கும் ஓர் உட்தலைப்புக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலுள் சாதனை புரிந்த மனிதர்களை அடையாளப் படுத்துவதோடு நின்றுவிடாமல், அவர்களுக்குப் பின்னிருந்து இயக்கிய ஆசிரியர்களின் அறப்பணியைச் சேர்த்தும் அடையாளப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. அந்த வரிசையில் சாதனை புரிந்த மனிதர்களாகிய இராதாகிருட்டிணன், சரவணப் பெருமாள் கவிராயர், சவகர்லால் நேரு, தாமஸ் ஆல்வா எடிசன், மில்லர், ஜி.யு.போப், நிவேதிதா தேவி, ஞானியார் சுவாமிகள், மறைமலை அடிகளார், தேசிக விநாயகம் பிள்ளை, உ.வே.சா., பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், அறிஞர் அண்ணா, அப்துல் கலாம், பரிதிமாற்கலைஞர், ஹெலன் கெல்லர், வேங்கடராமன், மருத்துவர் சுரேந்திரன், வால்ட் டிஸ்னி, ஆர்.பாலகிருஷ்ணன், அடிகளாசிரியர் ஆகியோரைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தி, அவர்களது வாழ்வில் கல்வியும் கற்பித்தலும் கற்றலும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்ந்தன என்பதை அறிவுறுத்திச் செல்வதைப் பார்க்க முடிகின்றது.

இந்நூலினை ஆசிரியர்கள் படித்து இன்புறலாம். இக்கால மாணவர்கள் கல்வி கற்பதற்கான அனைத்து வசதிகள் இருந்தும் திரைநாயகர்கள் பின்னால் அலைந்து வீணாகிக் கொண்டு இருக்கிறார்கள், அவர்களும் படித்துக் கல்வியை மேம்படுத்திக் கொள்ளத்தக்க அறிவுரைகள் இந்நூலுள் பொதிந்து கிடக்கின்றன.

இந்நூலை முழுமையாக வாசிப்போருக்குப் பிறிதொரு தகவலும் கிடைக்கும். திண்ணைக் கல்வியில் இருந்த ஆர்வம் இன்றைய கல்வி முறையில் இல்லை என்ற தகவலே அது. அதாவது குருகுலக்

[5] தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை & அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 042, தமிழ்நாடு, இந்தியா. 9600370671, sathiyarajt@skacas.ac.in

கல்விமுறையில் இருந்த ஆசிரியரின் அறப்பணி இக்காலக் கல்விமுறையில் குறைவாகவே உள்ளது என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது இந்நூல்.

இந்நூலின் நோக்கம் குருகுலக் கல்வி மீண்டும் வராதா என்ற ஏக்கத்தோடு அமைவதையும் உணரமுடிகின்றது. அதற்காக அதுமட்டுமே நோக்கமாகக் கொள்ள முடியாது. இக்கால மெக்காலே கல்விமுறையில் அமைந்துள்ள சிறப்புகளையும் மறைமுகமாக எடுத்துக்கூறி, அக்கல்விமுறையில் வளர்ந்தவர்களின் அடையாளத்தையும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனுள் ஆசிரியர் எனும் சொல்லுக்கு இணையான *Teacher* எனும் ஆங்கிலச் சொல்லுக்கு வழங்கப்பெறும் பொருள் பொதிவையும் சுட்டிக்காண்பிக்கப் பெறுகிறது. அது வருமாறு:

> ‘’மேற்குறித்த ’*TEACHER*’ என்னும் ஆங்கிலச் சொல்லின் பொருள்படி,
> பாடப்பயிற்சி உடையவராக (*Training*)
> கல்வியாளராக (*Eduation*)
> திறமையுடையவராக (*Ability*)
> நன்னடத்தை உள்ளவராக (*Character*)
> நேர்மையான ஒழுக்கம் உடையவராக (*Honesty*)
> உழைத்து ஊதியம் பெறுபவராக (*Earning*)
> உரிய காலத்தில் பணியை நிறைவு செய்பவர்களாக (*Retirement*)
> ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும். அஃதாவது ’*TEACHER*’ என்னும் ஆங்கிலச் சொல்லில் மறைந்திருக்கும் ஏழு எழுத்துக்களுடைய பொருளின் மொத்த உருவமாக ஆசிரியர்கள் திகழவேண்டும்’’ (ப.13).

ஒவ்வொரு குறுங்கட்டுரையைத் தொடங்கும்பொழுது சான்றோர்களின் மேற்கோள் சிந்தனைகளுடன் அந்தக் கட்டுரையை எழுதியுள்ளார் சிவபெருமான். சான்றிற்கு, ’மாணவர்களின் அறிவை விரியச் செய்வதற்கு ஆசிரியர் செய்யவேண்டிய பணிகள்’ எனும் கட்டுரையின் தொடக்கத்தில்,

> *’’கண்டிப்பதை விட்டுவிட்டு அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறீர்களோ அப்படி நீங்கள் வாழ்ந்து காட்டுங்கள்’’*

எனும் தத்துவஞானி பிளேட்டோவின் சிந்தனையைக் கூறி இக்கட்டுரையைத் தொடங்குகிறார் சிவபெருமான்.

சிறந்து விளங்கிய சாதனையாளர்களை அறிமுகப்படுத்தியதோடு மட்டுமின்றி, ஆசிரியப்பணி மேன்மையுற வேண்டிய அனைத்துக் கருத்துக்களும் சுட்டிக் காண்பிக்கப் பெற்றுள்ளன. அதில் ‘ஆசிரியன் (*Teacher*) சொல்லும் பொருளும், ஆசிரியப் பணியே அறப்பணி, செவிச்செல்வம், கல்வியும் கடவுளும், பண்டைய கல்விச் சிந்தனைகளை நினைவுகூர்தல், பருவம் அறிந்து கல்வியைப் புகட்டுங்கள், மாணவர்களின் அறிவை விரியச் செய்வதற்கு ஆசிரியர் செய்ய வேண்டிய பணிகள், மாணவர்கள் முழுப் புலமைபெற வழிகள், மாணவர்கள் நலன்களுக்காகப் பெற்றோர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், மாணவர்கள் பின்பற்ற வேண்டிய நெறிகள், நூலைத் தேடு உலகம் உன்னைத் தேடும், இந்திய மாணவர்கள் கல்வியோடு ஒழுக்கத்தைப் பயில்கிறார்கள், மதிப்பெண்களைவிட மாணவர்கள் உயர்ந்தவர்கள்’ ஆகிய குறுங்கட்டுரைகள் அடங்கும்.

இறுதியாக, ஆசிரியர்களுக்கான ஆத்திச்சூடி ஒன்றையும் எழுதியுள்ளார் சிவபெருமான். இதில் அ முதல் வெள வரையிலான 96 எழுத்துக்களுக்கு ஆத்திச்சூடி ஒன்று இடம்பெற்றுள்ளது. அது, ’அறிவே இறைவன்’ தொடங்கி ’வெளவி வாழாதே’ என முடியும் இறுதியைக் கொண்டதாகும்.

நூலின் தொடக்கம் நூலாசிரியரின் உரையாக அமைந்து, நூலின் இறுதி ஆசிரியரின் குறிப்புடன் நிறைவுறுகிறது.

முடிப்பாக, இந்நூல் கற்கக் கற்கத் தெளிவு தரும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது எனலாம். காரணம் கல்வி கற்றல், கற்பித்தல் தொடர்புடைய தெளிவுகள் இடம்பெற்றுள்ளமையேயாகும். இந்நூலினை அனைவரும் வாங்கி வாசித்தல், ஆசிரியப் பணியை அறப்பணியாக மாற்ற வழிவகுக்கும் எனக் கூறலாம்.

**துணைநின்றது**

சிவபெருமான் அ., (2017), *ஆசிரியப் பணியே அறப்பணி*, விழுப்புரம்: கயிலாயநாதர் பதிப்பகம்.